# சிவன் பார்வதி திருமணமா இல்லை மறுமணமா ?

## சாந்திப்பிரியா

(பிப்ரவரி, 2007 ஆம் ஆண்டு நலம் வள பேசும் தெய்வம் என்ற இதழில் வெளியான கதையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )



( நன்றி: ஜோதிர்மயானந்தா அவர்களின் mysticism of Ramayna என்ற நூலில் கூறப்பட்டு உள்ள கதை இது. அவர் எழுதியுள்ள அனைத்தையும் தமிழில் பிரசுரிக்க எனக்கு முழு உரிமை தந்துள்ளார் )



சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் பலமுறை திருமணங்கள் நடைபெற்று உள்ளன. பல்வேறு சாபங்களின் காரணமாக பார்வதி பல்வேறு இடங்களில் பல பெற்றொர்களுக்கு மகளாகப் பிறந்தாலும் முடிவில் அந்த அந்தப் பிறவியிலும் அவர் சிவபெருமானையே மணந்து உள்ளார் என்பதே உண்மை. ஆப்படிப்பட்ட பிறவி பற்றிய கதையே இது.

திருதேயுகத்தில் சிவனும் அவருடைய மனைவியுமான பார்வதி தேவி தேவ லோகத்தில் இருந்து இறங்கி ஆகாயத்தில் நடந்து கொண்டு இருந்தனர். திடீரென சிவபெருமான் ‘ஜெய் சச்சிதானந்தா’ எனக் கூறியதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தாள். அவரிடம் நீங்கள் தெய்வமாக இருந்தும் பூமியில் உள்ள சாதாரண மனிதருக்கு கை கூப்பி வணங்கியது என் எனக் கேட்க சிவபெருமான் கூறினார் ‘தேவி அவர் சாதாரண மனிதர் அல்ல, நான் வணங்கும் பரப்பிரும்மன்’ எனக் கூறினார். அதைக் கேட்டு மனத் திருப்தி அடையாத பார்வதி ‘ அதெப்படி அவர்

பரப்பிரும்மமாக இருக்க முடியும். காணாமல் போ தன்னுடைய மனைவியைத் தேடி காட்டில் சுற்றி அலைபவர் எப்படி பரப்பிரும்மமாக இருக்க முடியும என மீண்டும் மீண்டும் கேட்ட பார்வதி உண்மையை உணர வேண்டும் எனில் அவள் நெரடியாக அவரை புரிந்து கொள்ள வேண்டும் என நினைத்த சிவபெருமான் 'நீயே பூமிக்குச் சென்று இராமன் எனும் அந்த மனிதரை அவர் பரப்பிரும்மா இல்லையா என்பதை சோதித்துப் பார்' எனக் கூறி அவளை பூமிக்கு அனுப்பினார்.

பார்வதியும் தன்னை இராமனின் மனைவி போலவே மாற்றிக் கொண்டு அவர் உலவிக் கொண்டு இருந்த வனத்தருகில் சென்று சற்று துாரத்தில் நின்று கொண்டாள். ஆவள் வந்ததைக் கவனித்த இராமரின் சகோதரர் லஷ்மணரோ, இந்த நெரத்தில் பார்வதி தேவி ஏன் இந்த ரூபத்தில் வந்திருக்கின்றாள் என மனதில் எண்ணத் துவங்கினார். துாய மனித உருவில் இருந்த அவர்களுக்கா பார்வதி தேவியை அடையாளம் கண்டு பிடிக்க முடியாது? ஆதை கவனித்துவிட்ட இராமபிரான் தன் மனதில் சிரித்டதுக் கொண்டு நின்றிருந்தார்.

பார்வதி சீதையின் உருவில் நின்றிருந்த இடத்திற்கு சென்ற இலஷ்மணர் தன் கைகளைக் கூப்டபியபடி ' தேவி இந்த நேரத்தில் சிவபெருமானின் துணையின்றி தாங்கள் இங்கு வந்தள்ளதின் காரணத்தை அறியலாமா" எனக் கேட்க சீதை உருவில் இருந்த பார்வதிக்கு தர்ம சங்கடம் ஆகிவிட்டது. தான் தெரியாமல் தவறு செய்துவிட்டோமோ என ஒரு கணம் நினைத்த போதிலேயே இராமபிரான் தன்னுடைய மாயை தோற்றத்தை அவள் முன் நிழலாட விட்டார். உலகத்துக்குள் உலகங்கள், யுக யுகமாக நடந்த நிகழ்ச்சிகள், அவற்றில் சிவன், விஷ்ணு, பிரும்மா போன்ற அவதாரங்கள் என அனைத்தையும் காட்டினாலும், அந்த யுகங்கள் அனைத்திலும் தானும், சீதையும், இலஷ்மணரும் அவர்களாக ஒரே உருவில் இருந்ததையும் காட்டினார்.

பார்வதி கண்களைத் திறந்து பார்த்தாள். இராமனைப் பற்றி தான் கொண்டிருந்த தவறான எண்ணத்திற்கு அவமானப்பட்டு மீண்டும் தேவலோகத்திற்குத் திரும்பினார். ஆவளிடம் சிவபெருமான் கேட்டார் 'என்ன இராமனை சோதித்துவிட்டு வந்து விட்டாயா ?' தான் அடைந்த அவமானத்தை மூடி மறைக்க பார்வதி கூறினாள் 'பிரபோ, நான் என்ன அவரை சோதிப்பது. நீங்கள் அவரை எப்படி வணங்கினீர்களோ அப்படித்தான் நானும் அவரை வணங்கிவிட்டு வந்தேன்' எனக்கூறினாலும், சிவபெருமானுக்கு உண்மை தெரியாதா என்ன? அவள் தம்மிடமே பொய் கூறிவிட்டதினால் இப்பிறவியில் தன்னுடன் மனைவி ஸ்தானத்தில் வைத்துக் கொண்டு வாழ முடியாது எனத் தீர்மானித்தார்.உடனேயே தான் ஒரு தனிமையான

இடத்திற்குச் சென்று மகா சமாதியில் அமர்ந்து கொண்டார். அதற்கான காரணத்தைப் புரிந்து கொண்ட பார்வதி அழுது புலம்பினாள். நான் தெரியாமல் தவறு செய்து விட்டேன், என்னை மன்னித்திடுங்கள், நான் கூறிய பொய்க்கான தண்டனையை அனுபவித்து விட்டேன். இந்தப் பிறவியில் உங்கய் மனைவியாக இருக்க முடியாதெனில் எனக்கு உடனே மறு ஜென்மம் எடுக்க அருள் புரிந்து என்னை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என வேண்டியபடி அவர் எதிரில் தானும் அமர்ந்து கொண்டாள்.

பல ஆண்டுகள் கடந்தன. சுமாதி நிலையில் இருந்த சிவபெருமான் முன்னால் பார்வதியும் அமர்ந்து இருந்தாள். சமாதி நிலை கலைந்து 'ராமா,ராமா' எனக் கூறியபடியே கண்களைத் திறந்த சிவபெருமானிடம் தன்னுடைய தந்தை தஷ்யன் நடத்தும் யாகத்திற்கு செல்ல அனுமதி கேட்டுக் கொண்டு தந்தையின் இருப்பிடம் சென்றாள். அவளுக்கு அங்கு ஏற்பட்ட அவமானத்தைத் தாங்காமல் யாக குண்டத்தில் விழுந்து உயிர்விட முடிவு செய்தவள் மனதில் இராமரிடம் வேண்டினாள்' நான் இந்த யாக குண்டத்தில் விழுந்து இறந்தாலும், வேறு எவருக்காவது மகளாகப் பிறந்து மீண்டும் சிவபெருமானின் மனைவியாகவே ஆக வேண்டும்'.

அதற்கேற்ப யாக குண்டத்தில் விழுந்து மரணம் அடைந்தவள் இமயமலை அதிபரான ஹிமாவத்தின் புதல்வியாகப் பிறந்தாள். அந்தப் பிறவியில் சிவபெருமானைக் காலித்து மணந்து கொண்டு மீண்டும் சிவபெருமானுடன் இணைந்தாள். எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனைப் பிறவியிலும் பார்வதி சிவபெருமானையே மணந்து கொண்டாள்.

*இந்த கதையின் தத்துவத்தை ஜோதிர்மயாநந்தா இப்படியாகஅருமையாக எடுத்துக் காட்டுகின்றார். ' எப்படி ஒரு பரப்பிரும்மம் மனிதப் பிறவி எடுக்க முடியும் என பார்வதி சந்தேகப்பட்டாளோ அப்படித்தான் நாம் ஒவ்ஒருவரும் நம்முன்னேயே நிற்கும் கடவுளைத் தெரிந்து கொள்ளாமல், அவரைத் தேடி இடம் இடமாக அலைகின்றோம். கடவுளால் மனித அவதாரம் எடுக்க இயலும். நமது மனம் அறியாமையில் இருக்கும் பொழுது நன்கு கற்றறிந்தவர்கள் கூறுவதைக் கூட நாம் நம்ப மறுக்கின்றோம். சுந்தேகம் என்ற மாயையில் உழல்கின்றோம். ஆந்த அறியாமையில் நாம் செய்யும் தவறுகளை உணர மறுக்கின்றோம் என்பதை எடுத்துக் கர்ட்டவே இயற்கை நமக்கு பார்வதியின் இந்தக் கதை மூலம் பாடம் புகட்டி உள்ளது.*